DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | | | |
|---|---|---|---|
| Case No. | : CC-266/2018 | Taluk | : |
| Deposition of Witness for | : PW-2 | Calling | : |
| Name | : பரமேஸ்வரி | Religion | : |
| Father Name | : பாண்டி | Age | : |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 9th March 2026.

---

(1,3 வது எதிரிகள் இறப்பு. 2,4,5 வரையிலான எதிரிகள் ஆஜர்).

முதல் விசாரணை:-

1) நான் சிவகங்கை வண்டவாசி கிராமத்தில் குடியிருந்து வருகின்றேன். அ.சா.1 என் மாமனார். இவ்வழக்கு 1-வது எதிரியின் மனைவி இறப்பிற்கு எனது கணவர் பழனியும், உறவினர்களும் காரணம் என புகார் கொடுக்கப்பட்டு எனது கணவர் ஜெயிலுக்கு அனுப்பப்பட்டார். வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

Hostile (அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அவ்வாறே சாட்சி பகுதி பிறழ்சாட்சியென அறிவிக்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது).

அரசு தரப்பு குறுக்கு விசாரணை:

புகார்தாரர் எனது மாமனார் என்றால் சரிதான். என்ன நடந்தோ அதை தான் புகார்மனுவில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். எனது கணவர் மீது எதிரிகள் தரப்பில் கொடுக்கப்பட்டுள்ள புகாரின் மீது நிலுவையில் உள்ள வழக்கை எதிரிகள் தரப்பில் சமரசம் செய்து கொள்வதாக சொன்னார்களா என்றால் ஆமாம். தற்சமயம் நாங்களும் எதிரிகளும் நீதிமன்றத்திற்கு வெளியே பேசி சமரசமாகி இந்நீதிமன்றத்தில் சமரசமனு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.2 சமரசமனுவில் உள்ள புகார்தாரர் கைரேகைக்கு மேல் உள்ள கையொப்பம் என்னுடையது தான். நாங்களும் எதிரிகளும் சமரசமாகிவிட்டபடியால் தான் போலீசார் விசாரணையில் சொன்ன வழக்கு சம்பவம் குறித்து எனது முதல் விசாரணையில் தெரியாது என சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

அ.சா.1 புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரிகளுக்கும், இவ்வழக்கு சம்பவத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான்.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.1,
சிவகங்கை.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | | | |
|---|---|---|---|
| Case No. | : CC-266/2018 | Taluk | |
| Deposition of Witness for | : PW-1 | Calling | : |
| Name | : செல்லமுத்து | Religion | : |
| Father Name | : ஆறுமுகம் | Age | : |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 9th March 2026.

---

**(1,3 வது எதிரிகள் இறப்பு. 2,4,5 வரையிலான எதிரிகள் ஆஜர்).**

**முதல் விசாரணை:-**

1) நான் சிவகங்கை வண்டவாசி கிராமத்தில் குடியிருந்து வருகின்றேன். நான் விவசாய கூலி வேலை செய்து வருகின்றேன். இவ்வழக்கு 1-வது எதிரியின் மனைவி இறப்பிற்கு எனது மகன் பழனியும், உறவினர்களும் காரணம் என புகார் கொடுக்கப்பட்டு எனது மகன் ஜெயிலுக்கு அனுப்பப்பட்டார். தேதி, மாதம், வருடம் ஞாபகமில்லை, சுமார் 10-வருடங்களுக்கு முன்பாக சத்தம் போட்டதாக தெரிந்து வந்து பார்த்தேன் மற்றபடி வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகார்மனு நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். (**அந்த புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

Hostile (அரசு தரப்பில் சாட்சியை **பகுதி** பிறழ்சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அவ்வாறே சாட்சி பகுதி பிறழ்சாட்சியென அறிவிக்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது).

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

சாட்சி பரமேஸ்வரி எனது மருமகள் என்றால் சரிதான். என்ன நடந்தோ அதை தான் புகார்மனுவில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது மகன் மீது எதிரிகள் தரப்பில் கொடுக்கப்பட்டுள்ள புகாரின் மீது நிலுவையில் உள்ள வழக்கை எதிரிகள் தரப்பில் சமரசம் செய்து கொள்வதாக சொன்னார்களா என்றால் ஆமாம். தற்சமயம் நாங்களும் எதிரிகளும் நீதிமன்றத்திற்கு வெளியே பேசி சமரசமாகி

இந்நீதிமன்றத்தில் சமரசமனு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் சமரசமனுவில் உள்ள புகார்தாரர் கைரேகை என்னுடையது தான். அந்த சமரசமனு **அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). நாங்களும் எதிரிகளும் சமரசமாகிவிட்டபடியால் தான் புகாரிலும் போலீசார் விசாரணையிலும் சொன்ன வழக்கு சம்பவம் குறித்து எனது முதல் விசாரணையில் தெரியாது என சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

நான் எனது முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளை தான் நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கும் போது சொன்னேனா என்றால் ஆமாம். போலீசார் என்னிடம் எழுதாத வெள்ளை பேப்பரில் தான் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான்.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1,
சிவகங்கை.